# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்),**
**தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590**

**ஆணை நாள்: 10.11.2020**

**முன்னிலை**

**திரு. ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

...............

**வழக்கு எண். SA12823/F/2019**

**திரு S.R. சையத் அலி பாஷா ... மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**உதவி செயலாளர் - II,**
**தமிழ்நாடு வக்ஃபு வாரியம்,**
**எண்.1, ஜாபர்சிராங் தெரு,**
**வள்ளல்சீதக்காதி நகர், சென்னை - 600 001. ... பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **19.08.2019** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **17.10.2019** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **12.12.2019** |

******

**ஆணை**

இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு S.R. சையத் அலி பாஷா மற்றும் பொதுத் தகவல் அலுவலர்/ உதவி செயலாளர்-II, தமிழ்நாடு வக்ஃபு வாரியம், எண்.1, ஜாபர்சிராங் தெரு, வள்ளல்சீதக்காதி நகர், சென்னை ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் 19/08/2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில்,

- வக்ஃபு வாரியத்தின் முன் சமர்ப்பித்த சமாதான உடன்படிக்கையின்படி ஈச்சம்பட்டி ஜமாத்தார்கள் மற்றும் ஜனாப் ரஹமத்துல்லா ஷாசுத்தார் (எ) பீர் ஹசரத் ஆகியோர் வக்ஃபு சொத்துக்களை பிரித்துக்கொள்ள செய்து உடன்படிக்கையின் நகல்,
- சமாதான உடன்படிக்கையை நிராகரித்து நீதிமன்றத்திற்கு வக்ஃபு வாரியம் கொடுத்த அறிக்கையின் நகல், அந்நகலை வழக்கரைஞர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டார்களா, வழக்குரைஞர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வக்ஃவு வாரிய அறிக்கையின் நகல்,
- வக்ஃபின் முத்தவல்லி நியமனம் தொடர்பாக புரோபர்மா அறிக்கையில் முத்தவல்லி நியமனம் பரம்பரை எனவும் இப்பகுதியில் இதுவே வழக்கம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே திருச்சி வக்ஃபு கண்காணிப்பாளர் அவர்கள் தகுதியுடைய நபர்களின் பட்டியலை அறிக்கையாக வக்ஃபு வாரியத்திற்கு சமர்ப்பித்த அறிக்கையின் நகல் வழங்கவும் மற்றும் மனுதாரர் எதன் அடிப்படையில் பரம்பரை முத்தவல்லி நியமனத்திற்கு தகுதியற்றவன் என்று நிராகரிப்பு செய்யப்பட்டது என்ற தகவலை வழங்கவும்,
- திருச்சி வக்ஃபு கண்காணிப்பாளர் அவர்கள் ஈச்சப்பட்டி வக்ஃபு சொத்துகளில் வாடகைதாரர்கள், ஆக்கிரமிப்பாளர்கள் பட்டியலை வக்ஃபு வாரியத்திற்கு சமர்ப்பித்த பட்டியலின் நகலை வழங்கவும்,
- திருச்சி வக்ஃபு கண்காணிப்பாளர் அவர்கள் ஈச்சப்பட்டி வக்ஃபு சொத்துகளில் வாடகைதாரர்கள், ஆக்கிரமிப்பாளர்கள் பட்டியல் வாரியத்தால் பரிசீலிக்கப்பட்டு வக்ஃபு சட்டம் 1995ன்படி வக்ஃபு சொத்துக்களில் வாடகைதாரர்களின் குத்தகை காலத்தில் நீட்டியது மற்றும் ஆக்கிரமிப்பாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் நகல் வழங்கவும்,
- பரம்பரை முத்தவல்லியாக வருபவர் ஆக்கிரமிப்பாளராகவோ அல்லது வக்ஃபு சொத்தை விற்பனை செய்தவராகவோ (அ) வக்ஃபு சொத்தை மாற்றப்பட்டவராகவோ இருந்தால் அவருடைய மகன் பரம்பரை முத்தவல்லியாக நியமனம் செய்யப்படலாமா, அதற்கு கால நிர்ணயம் உண்டா என்ற தகவலையும்,
- மனுதாரர் தான் வக்ஃபு சொத்துக்களை விற்றுள்ளதாக தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளதாகவும், தான் விற்பனை செய்த வக்ஃபு சொத்துக்களின் நகல்

என்பது போன்ற தகவல்களை 12 இனங்களில் வழங்கக் கேட்டு பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃபு வாரியம், சென்னை என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காததால் மேல்முறையீட்டாளர் 17.10.2019 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃபு வாரியம், சென்னை அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்காததால் மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவலை வழங்க உத்தரவிடுமாறு கோரி 12.12.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை

ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (10.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர் தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என தெரிவித்து தான் கோரிய தகவலை பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் 6(1) மனுவில் கோரிய தகவல்களை வழங்க சிறிது கால அவகாசம் வேண்டும் என ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு சரியான தகவல் வழங்கப்படவில்லை என்பது தெரிகிறது. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கின்றது :-

- மேல்முறையீட்டாளர் 19**.08.2019** தேதியிட்டு கோரிய தகவல்களை முழுவதுமாக **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி அனுப்பிவைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

- **மேல்முறையீட்டாளர் 19.08.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1)-ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.**

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

வழக்கு எண். SA12823/F/2019

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/
உதவி செயலாளர் - II,
தமிழ்நாடு வக்ஃபு வாரியம்,
எண்.1, ஜாபர்சிராங் தெரு,
வள்ளல்சீதக்காதி நகர், சென்னை - 600 001.

<u>மனுதாரர்</u>
திரு S.R. சையத் அலி பாஷா,
த/பெ E.S. சையத் ரவூப்பாஷா,
30, மேலபாக்கத்துறை,
ஆயக்குடி அஞ்சல்,
காட்டுமன்னார்குடி தாலுக்கா,
கடலூர் மாவட்டம் - 608 306.

Copy to: Judgement File/ Spare.
JE/PA-19.11.2020